வில்லியர் காலனிக்கு தெரு மின்விளக்குகளுக்கு மின் இணைப்பு அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மேற்கண்ட காலனியில் இருளர் என்ற பிற்பட்ட ஜாதியினர் வசிக்கிறார்கள். ஆகவே, அந்த ஒரு காலனி மட்டும் இருட்டாக இருப்பது அவ்வளவு சரியாக இல்லை. தனியாக ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, அந்தக் காலனி முழுவதும் தெரு விளக்கு ஏற்படுத்துவதற்கு அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான நடவடிக்கையை மாவட்ட ஆட்சியாளர் எடுத்திருக்கிறார். அந்த ஊராட்சி விதிகள்படி கட்ட வேண்டிய தொகையை கட்டவில்லை. கட்டிவிட்டால் உடனடியாக அந்தத் தெருவுக்கு விளக்கு போடப்படும். சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

படமாத்தூர்–திருப்பாச்சேத்தி சாலையில் தரைப் பாலம்.

* 556 **வினா—திரு. த. சோனையா** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், படமாத்தூர்–திருப்பாச்சேத்திச் சாலையில் குறுக்கே கானூருக்கு அருகில் வைகையின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாலத்துக்கான அஸ்திவார வேலை நடைபெற்று வருகிறது.

Low Cost Houses

* 557 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to give priority to low cost housing; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) ஆம். மலிவு விலை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீட்டு வசதி வாரியம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 4,543 மலிவு விலை வீடுகளை 484.94 லட்சம் ரூபாய் செலவில் கட்ட செயற்குறிப்புகளை தயாரித்துள்ளது. எந்த அளவிற்கு புதிய வீடுகளைக் கட்ட வேண்டுமென்பது கிடைக்கும் நிதியின் நிலைமையினைப் பொறுத்ததாகும். ரூ. 199.19 லட்சம் செலவில், 1,822 மலிவு விலை வீடுகளை கட்டுவதற்கான திட்டங்களை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொண்டு 444 வீடுகளை கட்டி முடித்திருக்கின்றன. 1,060 வீடுகளை கட்டத் தொடங்கி வேலை நடந்து கொண்டிருக்கிறது. எஞ்சியுள்ள 318 வீடுகளை 1975–76 நிதி ஆண்டில் கட்ட எடுக்கப் படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகளை எந்தெந்த மாவட்டத்தில் கட்டுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது, எவ்வாறு கட்டிக் கொண்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த மலிவு வீடுகள் ரூபாய் 13,000-க்கு உள்ளாக இருக்கிற வீடுகள். அவைகளை சில மாவட்டங்களில், தேவைப்படுகிற இடங்களில் கட்டிக் கொண்டு இருக்கிறோம். பல மாவட்டங்களில் அதிகமாக வேலைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மலிவு வீடுகளை அதிகமாக விரும்பக்கூடிய சூழ்நிலையில், எல்.ஐ.சி. போதுமான அளவுக்கு நிதி கொடுக்க தயாராக இருக்கின்றபோது, வருகின்ற ஆண்டில் இன்னும் அதிகமாக மலிவு வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதிகமாக வீடுகளை கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் விரும்புகிறது. சிமெண்ட் கிடைப்பதில்லை. எல்.ஐ.சி.-யில் அக்டோபரில் அதற்கான பணத்தை வாங்குகிறார்கள். வாங்குகிற பணத்தை எவ்வளவு வேகமாக செலவழிக்க வேண்டுமோ, அதைச் செய்து கட்டுகிறோம். கட்டடம் கட்டுவதில் சில சங்கடங்கள்